# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

முறையீட்டு மனு எண்: 237/2017/பே
ஆணை நாள். 12–12–2018.

**திரு எஸ். சஞ்ஜய் குமார், மற்றும்**
**திருமதி ஆர். ரேவதி ராஜேந்திரன்,**
**1/13–1 முத்து நகர்,**
**Site No/94, எல்லைமேடு**
**சென்னிமலை ரோடு,**
**ஈங்கூர் அஞ்சல்,**
**பெருந்துறை – 638 052** —— முறையீட்டு மனுதார்.

**செயல் அலுவலர்,**
**பெருந்துறை பேரூராட்சி,**
**ஈரோடு மாவட்டம்** —— எதிர் மனுதாரர்.

**ஆணை.**

ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி, எண்.1/13–1 முத்துநகர் எல்லைமேடு, சென்னைமலை ரோடு பகுதியினைச் சேர்ந்த திரு S. சஞ்சய்குமார், மற்றும் திருமதி ரேவதி ராஜேந்திரன் ஆகியோரின் 20.11.2017 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.11.2017ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 237/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், உரியவாறு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி, முத்துநகர் குடியிருப்பு பகுதியில், 4–வது கிராசில் தங்கள் வீட்டு அருகில் திரு.மணிகண்டன், என்பவர் பனியன் தையல் நிலையம் வைத்து நடத்தி வருவதாகவும், இதன் மூலம் பஞ்சு நுண் துகள்கள் அருகில் உள்ள வீடுகளில் படிவதாகவும், தையல் இயந்திரத்தின் சத்தம் மற்றும் ஜெனரேட்டர் சத்தம், பனியன் கழிவுகளால் சுற்றுப்புற சூழல் பாதிப்பு

ஆகியவற்றால் அருகில் குடியிருப்போருக்கு மிகுந்த இடையூறாக உள்ள காரணத்தினால் மேற்படி நிறுவனத்தினை வேறு இடத்திற்கு மாற்ற ஆணைஅளித்து தங்களின் இடையூறினை தவிர்க்க கேட்டுக் கொண்டுள்ளனர்.

11.12.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையினைத் தொடர்ந்து பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலரின் 03.01.2018 நாளிட்ட விளக்க அறிக்கையில், மேற்படி முறையீடு தொடர்பாக ஏற்கனவே பெருந்துறை பேரூராட்சி மூலம் 16.12.2015 நாளிட்ட கடிதம் மூலம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டும், இது தொடர்பாக திரு.மணிகண்டன் என்பவருக்கு கடிதக்குறிப்பு அனுப்பியதாகவும், இதனைத் தொடர்ந்து திரு.மணிகண்டன் தனது 22.11.2017 நாளிட்ட கடிதத்தில், தான் 2010–ஆம் ஆண்டு முதல் மேற்படி இடத்தில் பனியன் ஜப் ஓர்க் நடத்தி வருவதாகவும், முத்துநகர் பகுதியில் சுமார் 50 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருவதாகவும், தான் யாருக்கும் இடையூறு ஏற்படாமல் தொழில் செய்து வருவதாகவும், மேற்படி நிறுவனம் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை மட்டுமே இயங்குவதாகவும், இந்நிறுவனத்தில் 10–க்கும் மேற்பட்ட பெண்கள் பணிபுரிவதாகவும் விளக்கங்கள் அளித்துள்ளரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புகாரில் குறிப்பிட்ட திருமதி.ரேவதி ராஜேந்திரன் என்பவர் 20 ஆண்டுகளாக இன்ப்ரா–டெக்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து வருவதாகவும், இதேபோல் திரு.சஞ்ஜய் குமார் என்பவரின் மனைவி 15 வருடங்களாக மேற்படி நிறுவனத்தில் வேலை செய்கின்றனர் எனவும், திருமதி. ரேவதி ராஜேந்திரன், பனியன் துணிகளை மேற்படி நிறுவனத்தில் இருந்து அவரது வீட்டிற்கு எடுத்துச் சென்று பிசிர் வெட்டி கடந்த மூன்று வருடங்களாக கொடுத்து வந்ததாகவும், இவர்கள் இருவரும் சுயநலத்திற்காக நடந்து கொள்வதாகவும், திரு.மணிகண்டன் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதே பகுதியினை சேர்ந்த பொதுமக்கள் 22.11.2017 நாளிட்ட மனுவில், மேற்படி எதிர் மனுதாரர் நடத்தி வரும் நிறுவனம் தொடர்பாக எந்தவிதமான புகாரும் தெரிவிக்கவில்லை எனவும், இதன் அடிப்படையில் பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலரின் 21.11.2017 நாளிட்ட கடிதம் மூலம் மேற்படி நிறுவனத்தின் மூலம் பொதுமக்களுக்கு ஏதேனும் சுற்றுச் சூழல் ஏற்பட வாய்ப்புள்ளதா என ஆய்வு செய்து அறிக்கை அளிக்கக் கோரி தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரித்தினை கோரியதாகவும், மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் 07.12.2017 நாளிட்ட கடிதத்தில் மேற்படி நிறுவனம் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய வகைப்பாட்டில் "வெள்ளை பிரிவின்" கீழ் வருவதாக தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து இது குறித்தான கருத்தினை தெளிவுபடுத்திடக் கோரி 03.01.2018 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளதாக பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

22.01.2018 நாளிட்ட இம்முறைமன்ற அறிவிப்பாணையில், மேற்படி நிறுவனம் இயங்குவது தொடர்பான சில விவரங்களை தெரிவிக்க பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, 14.02.2018 நாளிட்ட பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில், மேற்படி நிறுவனம், 2011–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருவதாகவும், தையல் மிஷின் வைத்து தைக்க பேரூராட்சியில் உரிமம் ஏதும் வழங்கப்படவில்லையெனவும், ஆனால் தனியார் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர், ஈரோடு அவர்களிடம் உரிமம் எண். 5850–ன்படி உரிமம் பெற்றுள்ளதாகவும்,

மாவட்ட சுற்றுச் சூழல் வாரியம் மேற்படி தையல் தொழிலுக்கு "வெள்ளை பிரிவிற்கான" விளக்கம் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி நிறுவனம் 10 தையல் இயந்திரங்களை வைத்து ரெடிமேட் ஜட்டிகளுக்கு எலாஸ்டிக் வைத்து இணைப்பு செய்யும் கூலி வேலை செய்து வருவதால் தொழில் வரி விதிப்பு செய்யப்படவில்லையெனவும், தனது அறிக்கையில் பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 08.05.2018 நாளிட்ட அழைப்பாணையினைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவத்தில் 25.06.2018 அன்று ஆஜரான ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், தான் 01.03.2018 முதல் பெருந்துறை பேரூராட்சியில் பணிபுரிவதாகவும், முறையீட்டு மனுதாரர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் தன்னை சந்தித்தபோது, தான் நிலையினை விளக்கியதாகவும், இது குறித்து தனக்கு முன் இருந்த செயல் அலுவலரால் 03.01.2018ல் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் மாவட்ட ஆட்சியருக்கு அளித்த மனுவின் தொடர்ச்சியாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு விவரம் அனுப்பி வைக்கப்பட்டு, மேற்படி மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலம் மேற்படி தொழிற்சாலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையல்ல எனவும் இது குறித்து முன்னாள் செயல் அலுவலர் விசாரணை மேற்கொண்டபோது சிலர் வாக்குமூலம் கொடுத்துள்ளதாகவும், தற்போது தான் மேற்படி நிறுவத்தினை ஆய்வு மேற்கொண்டதாகவும், திரு.சஞ்ஜய் குமார் மற்றும் திரு.ராஜேந்திரன் ஆகியோர் அடுத்தடுத்த வீட்டில் குடியிருப்பதாகவும், திருமதி ரேவதி ராஜேந்திரன் கடந்த சில ஆண்டுகளாக Infra நிறுவனத்தில் பணி புரிவதாகவும், திரு.சஞ்ஜய்குமாரின் மனைவி 15 வருடங்களாக Infra நிறுவனத்திலும் மற்றும் 5 வருடங்களாக New Thiruppur என்ற நிறுவனத்திலும் பணி செய்ததாக எதிர் மனுதாரர் தெரிவித்துள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் மற்றும் திருமதி.ரேவதி ராஜேந்திரன் ஆகிய இருவரும் சுய லாபத்திற்காகவே இவ்வாறு நடந்து கொள்வதாகவும், புகாரில் சொல்லப்பட்ட நிறுவனம் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இணை இயக்குநரிடம் உரிமம் பெற்றுள்ளதாகவும், மேலும் மாவட்டச் சுற்றுச் சூழல் வாரியம் தையல் தொழிலுக்கு வெள்ளைப் பிரிவின் கீழ் வருவதால் மாசு காட்டுப்பாட்டு வாரியத்தால் மாசு ஏதும் ஏற்படவில்லை என தெரிவித்துள்ளதாகவும், இந்த மனு முழுக்க முழுக்க சொந்த காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் அனுப்பப்பட்டதாக தெரிவித்து முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்ய தனது வாக்குமூலத்தில் பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

04.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி 11.09.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.சஞ்ஜய் குமார், மற்றும் திருமதி ரேவதி ராஜேந்தின் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தானும் திருமதி.ரேவதி ராஜேந்திரன் ஆகியோர் 20.11.2017 நாளிட்ட முறையீட்டு மனுவினை அனுப்பியதாகவும், அதில் முத்து நகர் குடியிருப்பில் Jeeve Sri Text என்னும் பனியன் தயாரிப்பு நிறுவனம் குறித்து புகார் அனுப்பியதாகவும், மேற்படி நிறுவனம் தங்கள் பகுதியில், தங்கள் வீட்டில் இருந்து 3 அடி தூரத்தில் உள்ளதாகவும் அதனுடைய உரிமையாளர் திரு. மணிகண்டன் எனவும், மேற்படி

பனியன் கம்பெனியில் இருந்து வருகின்ற அதிக அளவிலான பஞ்சு துகள்கள் தங்களுக்கு பெரிதும் இடையூறாக உள்ளதாகவும், தையல் இயந்திரங்களின் சத்தமும் ஜெனரேட்டர் சத்தமும் தங்களின் அமைதியான வாழ்க்கைக்கு இடையூறாக உள்ளதாகவும், மேற்படி கம்பெனியினை இட மாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். இது குறித்து பெருந்துறை வளாகத்தில் உள்ள மாவட்டச் சுற்றுச் சூழல் பொறியாளருக்கு கடிதம் அனுப்பியதாகவும், இதனைத் தொடர்ந்து மூன்று நாட்களுக்குள் 5–KVA திறன் உள்ள ஜெனரேட்டர் உள்ளதை குறிப்பிட்டு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் இருந்து மேற்படி நிறுவனத்திற்கு கடிதம் வந்ததாகவும், அதில் மேற்படி 5–KVA ஜெனரேட்டர் இயங்குவதால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என குறிப்பிட்டும் மேற்படி நிறுவனத்தினை குடியிருப்பு பகுதியில் இருந்து அப்புறப்படுத்த 15.12.2015ல் கடிதம் அனுப்பப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலரின் 30.10.2017 நாளிட்ட கடிதத்தில் மேற்படி தொழிற்சாலையினை 3 நாட்களுக்குள் மாற்றம் செய்யவேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் பேரூராட்சி மூலம் அப்புறப்படுத்தப்படும் என அறிவிப்பு வழங்கப்பட்டதாகவும், எனவே தங்களுக்கு இடையூறாக உள்ள இந்நிறுவனம் குறித்து மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கும் 26.10.2017ல் கடிதம் எழுதப்பட்டதாகவும், எனவே மேற்படி தொழிற்சாலையினை குடியிருப்பு பகுதியில் இருந்து வேறு பகுதிக்கு மாற்ற ஆணையிடுமாறு தனது வாக்குமுலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர்களின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. ஈரோடு மாவட்டம் பெருந்துறை பேரூராட்சி பகுதியில் இயங்கிவரும் ஜீ.வி.ஸ்ரீ.டெக்ஸ் நிறுவனத்தின் தொழிற்சாலையில் இருந்து வரும் சத்தத்தினால் பாதிப்பு ஏற்படுவதாக பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் 23.10.2017ல் ஆய்வு செய்த மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உதவிப் பொறியாளர் தனது ஆய்வறிக்கையில் மேற்படி நிறுவனம் 10 தையல் இயந்திரங்களுடன் 5KVa ஜெனரேட்டர் வைத்து இயங்குவதாக தெரிவித்து இத் தொழிற்கூடம் உள்ளாட்சி நிர்வாகத்தின் உரிய அனுமதி இல்லாமல் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே உள்ளாட்சி அமைப்புகள் சட்ட விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தொழிற்கூடத்திற்கு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை மூலம் உரிமம் பெறப்பட்டுள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்படி தொழிற்சாலைக்கு உள்ளாட்சி அமைப்புகள் நிறுவனச் சட்டம் மூலம் உரிய அனுமதி மற்றும் உரிமம் பெறப்படாதது குறித்து பெருந்துறை பேரூராட்சி மூலம் எந்த ஆய்வும் மேற்கொண்டதாகவோ, நடவடிக்கை எடுத்ததாகவோ பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையிலோ, செயல் அலுவலரின் வாக்குமூலத்திலோ தெரிவிக்கப்படவில்லை. எனவே இவ்வாறு உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதியின்றி செயல்படும் நிறுவனம் சம்பந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு வரி விதிப்பு நிர்ணயம் குறித்து பரிசீலித்து தாமதமின்றி தக்க நடவடிக்கைகளை துரிதப்படுத்திடுமாறு ஆணையிடப்படுகிறது.

. மேலும் குடியிருப்பு பகுதியில் பாதிப்பு ஏற்படுவதான புகார் குறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய துறை அலுவலர் மூலம் மறு ஆய்வு செய்திட உரிய நடவடிக்கை எடுக்கவும்,

ஆய்வு அறிக்கை பெற்று அதனடிப்படையில் தக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலருக்கு வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக.

பெறுநர்

1.திரு எஸ். சஞ்ஜய் குமார், மற்றும்
திருமதி ஆர். ரேவதி ராஜேந்திரன்,
1/13–1 முத்து நகர்,
Site No/94, எல்லைமேடு
சென்னிமலை ரோடு,
ஈங்கூர் அஞ்சல்,
பெருந்துறை – 638 052.

2.செயல் அலுவலர்,
பெருந்துறை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
ஈரோடு மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு.

4.மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியரகம்,
ஈரோடு.